1972 ஆகஸ்ட் 11]

திரு. என். கிட்டப்பா : வேளாண்மைக் கல்லூரிகள் அமைப்பதற்கு சிரமங்கள் அதிகமாக இருப்பதாகக் காணப்படுவதால் இத்தகைய வேளாண்மை வளர்ச்சிக்கான பாலிடெக்னிக்குகளையாவது விரைவில் அமைப்பதற்கு அரசு ஆவன செய்ய முன்வருமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : அதுபற்றிய யோசனை இப்போது இல்லை என்று முன்பே சொல்லியிருக்கிறேன்.

புதிய கோதுமை ரகங்கள்

*79 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் பயிரிடுவதற்கு ஏற்ற கோதுமை ரகங்கள் ஏதேனும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனவா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) ஆம்.

(இ) தமிழ்நாட்டில் மலைப்பிராந்தியங்களில் பயிரிடுவதற்காக "சப்பேர்டு எலர்மா" என்ற ரகமும், சமநிலை இடங்களில் பயிரிடுவதற்காக "கல்யாண் சோனா" என்ற ரகமும் பரிந்துரைக்கப்படுகின்றன.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இந்த ரக கோதுமைகள் எந்தெந்த மாவட்டங்களில் எந்தெந்த இடங்களில் பயிரிடலாம் என்று ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டதா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தமிழ்நாட்டில் நீலகிரி, கொடைக்கானல், ஏற்காடு, கொல்லிமலை இந்த நான்கு இடங்களில் பயிரிட, 1,250 ஏக்கரில் பயிரிடப்படுகிறது.

THIRU B. VENKATASWAMY : Sir, as far as the Hosur taluk is concerned, it is situated at an altitude of 30,000 feet. So, may I know from the Hon. Minister whether such kind of wheat has been introduced so far in the Hosur taluk and if so, the details thereof ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : நான் சொன்ன நான்கு இடங்களில் இப்போது ஏற்பாடாகியிருக்கிறது. உறுப்பினர் அவர்கள் நீண்ட நாட்களாக ஹோசூர் பற்றி சொல்லிவருகிறார்கள். அதுபற்றி யோசித்துக் கொண்டிருக்கிறோம்.